REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04) **4 PAGES** பக்கம் 1

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 22 CLICK - 05

AUGUST 2025 ₹. 1

### அறிவிப்பு

60 வயதுக்கு உட்பட்டவர்கள் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் இணைந்து குடும்ப பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு

**P. துரைபாபு**

CVPA செயலாளர்

# CVPAவின் 28வது பொதுக்குழு கூடியது






### அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மாநில சங்கத்திற்கு CVPA சார்பாக எந்த ஒரு பிரதிநிதியும் அனுப்புவதில்லை என்று பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கத்தின் (CVPA) 28 வது பொதுக்குழு கூட்டம் சென்னை புரசைவாக்கம் தர்மபிரகாஷ் திருமண மண்டபத்தில் கடந்த 13.08.2025 அன்று நடைபெற்றது. காலை 10 மணி அளவில் வருகை பதிவேட்டுடன் தொடங்கிய CVPA பொதுக்குழு கூட்டத்தை, CVPA தலைவர் புருஷோத்தமன் அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார். தமிழ்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இப்பொதுக்குழு கூட்டத்தில், முன்னாள் நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். CVPA பொதுக்குழுக் கூட்டத்தில், CVPA நிர்வாகிகள், துணைத் தலைவர்கள், இணைச்செயலாளர்கள், பகுதி செயலாளர்கள், மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். CVPA செயலாளர் துரைபாபு அவர்கள் கடந்த ஓர் ஆண்டாக சங்கம் சார்ந்த செயல்கள் குறித்து அறிக்கையாக சமர்ப்பித்தார். இவர் சமர்ப்பித்த செயலாளர் அறிக்கை சிறிய விவாதத்திற்கு பிறகு குறிப்பாக செயலாளர் அறிக்கையில் விடுபட்டு போன மாநில சங்க பொருளாளர் சுரேஷ் அவர்களை கண்டித்து நடைபெற்ற கண்டனக் கூட்டம் விடுபட்டு போனதற்கு, பிரச்சனையை எழுப்பினர். பின்னர் செயலாளர் அறிக்கையில் விடுபட்டுப் போனதற்கு வருத்தம் தெரிவித்த செயலாளர் அவர்கள் மினிட்ஸ் புக்கில் இதை பதிவிடுவதாக கூறி பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். மாநில சங்கத்தின் பொருளாளர் பொறுப்பு வகிக்கும் திரு. சுரேஷ் அவர்கள் ஒரு whatsapp குரல் பதிவில் CVPA மற்றும் CVPA நிர்வாகிகள் குறித்து தரக்குறைவான வார்த்தைகளால் பேசிப் பதிவிட்ட குரல் பதிவு , CVPA பொதுக்குழு உறுப்பினர்கள் மத்தியில் பெரும் கண்டனத்திற்கு உள்ளானது. எனவே, அவர் தனது செயலுக்கு உடனடியாக மன்னிப்பு கூற வேண்டும் என்று கண்டனக் கூட்டம் கூடி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கண்டனக் கூட்டத்திற்கு பிறகு அவரும் தனது செயலுக்கு மன்னிப்பு கூறினார். பொதுக்குழு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. இவரை தொடர்ந்து CVPA பொருளாளர் கௌரி பார்த்தசாரதி அவர்கள், கடந்த ஓராண்டின் வரவு செலவு கணக்குகளை பொருளாளர் அறிக்கையாக தாக்கல் செய்தார். இதுவும் சில விவாதங்களுக்கு பிறகு பொதுக்குழு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. பொதுக்குழு உறுப்பினர்களின் காரசாரமான கேள்விகளும், ஆலோசனைகளும், பலவிதமான சலசலப்புக் கிடையே, நடப்பு நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன.சில ஆலோசனைகள், பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதில், இரண்டு முக்கிய தீர்மானங்கள் பொதுக்குழு உறுப்பினர்களால் ஏக மனதாக கொண்டு வரப்பட்டது.

**தீர்மானம்:01**

நமது சங்கத்தில் ஆயுட்கால உறுப்பினர்களாக இருக்கும் அனைவருக்கும் ஏற்ற தாழ்வுடன் இருந்து வந்த விபத்து காப்பீடு முறை முழுவதுமாக ரத்து செய்யப்படுகிறது என்று ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்:02**

மாநில சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து நமது சங்க உறுப்பினர்களுக்கிடையே, குழப்பமான சூழ்நிலை நிலவி வருகிறது. நமது சங்க உறுப்பினர்களுக்கு மாநில சங்கத்தின் மீது முழுமையாக நம்பிக்கை ஏற்படும் வரை நமது மாவட்ட சங்கத்தில் இருந்து மாநில சங்கத்திற்கு எந்த ஒரு பதவிக்கும் பிரதிநிதிகளாக யாரையும் அனுப்புவதில்லை என்றும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இந்த தீர்மானம் கண்டிப்பாக அமலில் இருக்கும் என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்: 03**

மாற்று சங்கத்தில் பதவி வகிப்பவர்கள் நமது சங்கத்தை விட்டு அவர்களாகவே வெளியேறி விட வேண்டும். என்று நமது பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றி அனைவருக்கும் அனுப்பப்பட்டது. இதில் வடபழனியை சேர்ந்த உறுப்பினர் திரு. விஜய் மணி அவர்கள் மாற்று சங்கத்தில் இருந்து விலகியதோடு, அதற்கான கடிதத்தையும் கொடுத்து மீண்டும் தன்னை CVPA வில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று பொதுக்குழுவில் வைத்த கோரிக்கையை ஏற்று நம் சங்கத்தில் இணைந்தார்.

**தீர்மானம்: 04.**

நம் சங்க முன்னேற்றத்திற்காக சில பொதுக்குழு உறுப்பினர்களின் ஆதரவோடு, சைதாப்பேட்டை திரு.கண்ணன் அவர்கள் கொண்டு வந்த தீர்மானங்கள் பரிசீலிப்பதாக பொதுக்குழுவில் கூறப்பட்டது.

**தீர்மானம்: 05.**

டிஜி மீடியா மூலம் நம் சங்கத்திற்கு வரவேண்டிய பாக்கி பணத்தை, தற்போதைய மாநில அமைப்பாளரான திரு.சரவணன் அவர்கள் தருவதாக பொதுக்குழுவில் ஒப்புக்கொண்டார் .

**தீர்மானம்:06.**

நமது சங்கத்தில் இனி ஒருவருக்கு ஒரு பதவி என்கிற நடைமுறையை உடனடியாக செயல்படுத்துவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி மாவட்ட சங்கத்தில் எந்த ஒரு பதவியில் இருந்தாலும் அவர் மாநில சங்கத்தில் போட்டியிட முடியாது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்:07.**

நம் சங்க உறுப்பினர்கள் செலுத்தும், ரினிவல் ஆயிரம் ரூபாயை இரண்டாகப் பிரித்து 500 ரூபாய் நம் அலுவலக செலவிற்கும் , மீதமுள்ள 500 ரூபாயை சேமிப்பு கணக்காக வைப்பதாகவும் முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்:08.**

வாராக் கடனை வசூலிப்பது பற்றி ஒரு குழுவை அமைப்பது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்: 09.**

நம் சங்கத்தில் பணம் பாக்கி வைத்திருப்பவர்களுக்கு முறைப்படி தகவல் தெரியப்படுத்துவது என்றும், பாக்கி வைத்தவர்களின் பட்டியலை பொதுக்குழு உறுப்பினர்களின் பார்வைக்கு வைப்பது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்:10**

குடும்ப நல பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட CVPA NNT க்கு மாதம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குவதாக நந்தினி திரு.ராமகிருஷ்ணன் அவர்கள் பொதுக்குழுவில் அறிவித்தார். இதை ஏற்றுக்கொண்டு, அவரைப் பாராட்டி பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்:11.**

சங்க விதிமுறைகளை தமிழில் மாற்றி அமைக்கவும், ஏற்கனவே நடந்த பொதுக்குழு கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை பைலாவில் இணைக்கவும் ஒரு குழு அமைக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

PRO பாலச்சந்தர் அவர்களின் நன்றியுரையுடன், தேசிய கீதத்துடன் பொதுக்குழு இனிதே நிறைவுற்றது. மதிய உணவு நமது செயற்குழு உறுப்பினர் ராஜன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் குறை ஏதும் இன்றி உணவு வழங்கப்பட்டது. நமது சங்கத்தின் துணைத் தலைவர்கள், இணைச்செயலாளர்கள், பகுதி செயலாளர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து இந்த பொதுக்குழு ஏற்பாடுகளை சிறப்பாக செய்து இருந்தார்கள்.

## 79 சுதந்திர தினம் நமது சங்க CVPA அலுவலகத்தில் நமது சங்க செயலாளர் தேசிய கொடியை ஏற்றிவைத்தார்



79 சுதந்திர தினம் நமது சங்க அலுவலகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. CVPA செயலாளர் துரைபாபு அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். CVPA தலைவர் புருஷோத்தமன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்ச்சியில் CVPA நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மற்றும் முன்னாள் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



## வருந்துகிறோம்



வடசென்னை திருவொற்றியூர் பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் **TL.விஜயகுமார்** அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில், இயற்கை மரணம் அடைந்தார். தகவல் அறிந்து நமது சங்க நிர்வாகிகள் அண்ணாருக்கு அஞ்சலி செலுத்தியதுடன் அவருடைய குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர். நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானப்படி ஈமச்சடங்கு (1வருடம் மட்டுமே ரினிவலில் இருந்தார்) தொகையாக 10 ஆயிரம் ரூபாயை அவருடைய குடும்பத்தினரிடம் சங்க நிர்வாகிகள் வழங்கினார்கள்.

## உலக புகைப்பட தின கொண்டாட்டம்



உலக புகைப்பட தினத்தை ஒட்டி நமது சங்க நிர்வாகிகள் முன்னிலையில் சங்க தலைவர் புருஷோத்தமன் அவர்களும் சங்க செயலாளர் துரைபாபு அவர்களும் கேக் வெட்டி கொண்டாடினார்கள். சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர்கள் தங்கள் மகிழ்ச்சியை அனைவரிடமும் பகிர்ந்து கொண்டனர்.

## பஸ்ஸில் தவறவிட்ட கேனான் R8 கேமரா CVPAவின் வாட்ஸ்அப் நெட்வொர்க் மூலமாக மீட்கப்பட்டது








14.8.2025 அன்று ஸ்ரீமதி (விஸ்காம் படித்த மாணவி, மகளிர் புகைப்படக் கலைஞர் ) சென்னை தண்டையார்பேட்டை பஸ்ஸில் குடும்பத்துடன் பயணம் செய்தார்.பஸ்ஸில் கூட்டம் அதிகமாக இருந்தது. எனவே, கூட்ட நெரிசல் அதிகமாக இருந்த காரணத்தால், அவருடைய கேமரா Bagஐ இருக்கையில் அமர்ந்திருந்த பயணி ஒருவரிடம் கொடுத்து விட்டு நின்றபடி பயணம் செய்திருக்கிறார்.பஸ்சை விட்டு இறங்கும் போது, உடல் அசதியின் காரணமாக கேமரா Bagஐ வாங்க மறந்துவிட்டார். மேலும், தன்னோடு பயணம் செய்த குடும்ப உறுப்பினர்கள் யாரேனும் அந்த கேமரா Bagஐ வாங்கி இருப்பார்கள் என்று எண்ணத்துடன் இருந்து விட்டார். வீட்டுக்கு சென்ற பிறகுதான் யாருமே கேமரா Bagஐ வாங்கவில்லை என்கிற விபரம் தெரியவந்தது. உடனடியாக பஸ்ஸின் பணிமனைக்கு சென்று தேடி உள்ளார். இந்த தகவல் நம்முடைய NORTH சென்னை OFFICAL Whatsapp குழுவில் தண்டையார்பேட்டை பகுதியை சேர்ந்த திரு.லோகநாதன் அவர்கள் பதிவிட்டார்.

அதேசமயம் கேமரா Bagஐ வைத்திருந்த நபர் அவர் இறங்கும் இடம் வரும்பொழுது கேமரா கொடுத்த யாரும் அவர் அருகே இல்லை அவருடைய மகன் முருகன் அவர்களிடம் சொல்லி, அவரும் WHATSAPP STATUS மூலமாக பஸ்ஸில் பயணம் செய்த போது,கேமரா Bagஐ என்னிடம் கொடுத்தவர்கள் யாரும் இல்லாத காரணத்தால், அதை நான் கையோடு எடுத்து வந்து விட்டேன். கேமரா Bag எங்களிடம் பத்திரமாக இருக்கிறது. என்று ஸ்டேட்டஸ் வைத்தார். அந்த ஸ்டேட்டஸை கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடியில் உள்ள புகைப்படக் கலைஞர் திரு.விஜயகுமார் பார்த்து,தனது நண்பரான திரு.ராஜேஷ் கடலூர் O.Tயை சேர்ந்த புகைப்படக் கலைஞரிடம் கூறியுள்ளார். கேமரா Bag எனக்கு தெரிந்தவரிடம் பத்திரமாக உள்ளது. தக்க அடையாளம் கூறி கேமரா பேக்கை பெற்றுக் கொள்ளலாம்.மேலும் இந்த தகவலை சென்னை மாவட்ட சங்க நிர்வாகிகளுக்கு தெரிவித்து விடுங்கள் என்று கூறி இருக்கிறார். திரு.ராஜேஷ் அவர்கள் உடனடியாக கடலூர் மாவட்ட சங்க தலைவர் மற்றும் முன்னாள் மாநில சங்க பொதுச் செயலாளர் திரு.கடலூர் முத்து அவர்களிடம் தெரிவித்திருக்கிறார். அவர் நமது செயலாளர் திரு.துரைபாபு அவர்களை தொடர்பு கொண்டு விஷயத்தை தெரிவித்து இருக்கிறார்.

நமது செயலாளருக்கு தகவல் கிடைத்தவுடன், அவர் தண்டையார்பேட்டையில் இந்த செய்தியை வெளியிட்ட வாட்ஸ் அப் குழுவில் சம்பந்தப்பட்ட நபரை அணுகி, ஒரு மணி நேரத்தில் உரிய ஆவணங்களை சரி பார்த்து அந்த கேமரா Bagஐ சம்பந்தப்பட்ட நபரிடம் நமது சங்க செயலாளர் துரைபாபு, முன்னாள் பொருளாளர் திரு.பாலு, வடசென்னை துணைத் தலைவர் திரு.கவுஸ் பாஷா, வடசென்னை இணை செயலாளர் திரு.பிரபாகரன், திருவொற்றியூர் பகுதி செயலாளர் திரு.ஸ்ரீ திருமலை,கொடுங்கையூர் பகுதி செயலாளர் திரு.ராஜேஷ், தண்டையார்பேட்டை பகுதி செயலாளர் திரு. மதன், வண்ணாரப்பேட்டை முன்னாள் பகுதி செயலாளர் திரு.ரவிக்குமார் அவர்கள் முன்னிலையில் அந்த கேமரா Bag உரிய நபரிடம் ஒப்படைக்கப்பட்டது.


அந்த கேமராவை பெற்றுக்கொண்ட ஸ்ரீமதி ( மகளிர் புகைப்பட கலைஞர்) அவர் நமது சங்கத்திற்கும், கடலூர் மாவட்ட தலைவர் திரு.முத்துவிற்கு மனமகிழ்ந்து நன்றியை தெரிவித்தார் அவர் கேமராவை பெற்றுக் கொண்டதற்கான கடிதத்தையும் சங்க நிர்வாகிகளிடம்வழங்கி உள்ளார்.



சிந்தாமணி கம்ப்யூட்டர் திரு.சிவராமன் அவர்களின் மகன் ஆஷிஷ் - ஸ்மிருதி ஆகிய இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் CVPA இந்நாள் முன்னாள் நிர்வாகிகளுடன் முன்னாள் மாநில பொதுச் செயலாளர் ஆகியோர் நேரில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்




வடசென்னை, தண்டையார்பேட்டை பகுதியில் மிகப் பிரம்மாண்டமான முறையில் Eden கலர் லேப் நிறுவனம், ஸ்டுடியோவுடன், லேமினேஷன் பணிகளையும் ஒன்றிணைத்து,அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் ஈடன் கலர் லேப் திறக்கப்பட்டுள்ளது.இதன் திறப்பு விழா நிகழ்ச்சியில், CVPA செயலாளர் திரு.துரைபாபு அவர்கள் தலைமையில், துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள், பகுதி செயலாளர்கள், முன்னாள் நிர்வாகிகள், CVPA உறுப்பினர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



மடிப்பாக்கம் பகுதியை சேர்ந்த CVPA உறுப்பினர் திரு.ராமன் அவர்கள் விபத்து ஏற்பட்டு சிகிச்சை பெற்று, வீட்டில் ஓய்வு எடுத்து வரும் நிலையில்,அவருக்கு நமது சங்கத்தின் சார்பில், மருத்துவ சிகிச்சை செய்து கொள்வதற்காக வழங்கப்படும் ரூபாய் ஐந்தாயிரம் (5000/-) CVPA தலைவர் திரு. புருஷோத்தமன், முன்னிலையில் வழங்கப்பட்டது. அப்போது பிஆர்ஓ திரு.பாலச்சந்தர், துணைத் தலைவர் திரு. ஜெயக்குமார் இணைச் செயலாளர் திரு. ராதாகிருஷ்ணன் மற்றும் திரு.மடிப்பாக்கம் பகுதி செயலாளர் திரு.சுரேஷ் ஆகியோர் உடன் இருந்தார்கள்.



மத்திய சென்னை புளியந்தோப்பு பகுதியை சேர்ந்த, அன்னம் டிஜிட்டல் ஸ்டுடியோ உரிமையாளர், திரு.E.யுவராஜ் அவர்களின் மகளுடைய மஞ்சள் நீராட்டு விழாவில் CVPA நிர்வாகிகள் கலந்து கொண்ட தருணம்

Regd No. : 446/96

சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002. Cell : 7824034734

E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in

# நமக்கு நாமே
# குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

## சென்னை வீடியோ போட்டோ கலைஞர்களின் குடும்ப நலன் கருதி

## CVPA உருவாக்கியுள்ள நமக்கு நாமே திட்டத்தில்

## இன்றே இணைந்து உங்கள் குடும்ப பாதுகாப்பிற்கு

# 2 லட்சம் ரூபாய்

(*நிபந்தனைக்கு உட்பட்டது)

மேலும் விவரங்களுக்கு

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு |
| 7010936732 | 92821 64723 |

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukttharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351